மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15 ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.மஎண்.03/2023
உள்
அசல் வழக்கு எண்.23/2023
--------

1. ச.சக்கரைச்சாமி
2. ஆ.முத்துப்பாண்டி
3. மா.கந்தசாமி
4. மு.அழகுமூர்த்தி ... மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்கள்

/எதிர்/

1. எட்டு கிராமத்து கம்பளத்து நாயக்கர்களுக்கு
பாத்தியப்பட்ட இ.முத்துலிங்கபுரம் கிராமத்திலிருக்கும்
அருள்மிகு சக்கதேவி கோவில் அதன் பரம்பரை பூசாரியும்,
கம்பளத்து நாயக்கர் சமுதாயத்தினரின் பிரதிநிதியுமான
திரு.ச.முத்தையா மூலம் ... 1 ம் மனுதாரர்/வாதி

2. சக்கரைசாமி
3. ஆறுமுகம்
4. கந்த வேலம்மாள்
5. சங்கரவேல்
6. மாவட்ட ஆட்சியர் அவர்கள், விருதுநகர் ... 2 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/
1 முதல் 5 பிரதிவாதிகள்

இந்த மனு 23.08.2023 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 13.12.2023 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.ராஜேஸ் அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மாரிமுத்து அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.பாஸ்கரன் அவர்கள் ஆஜராகியும், 6 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும்

எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2)ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், தாவா அசல் வழக்கில் மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்களான மனுதாரர்களை 6 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 17.08.2023ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்**:–

தாவா வழக்கானது 5ம் பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரைக்காகவும் மற்றும் இ.ம.எண்.02/2023ன் எதிருரைக்காகவும் வாய்தா ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தாவா வழக்கில் மேற்படி மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்களான மனுதாரர்களை தாவா வழக்கில் கட்சிக்காரர்களாக சேர்க்கக்கோரி மனுதாரர்கள் தரப்பில் கடந்த 10.07.2023ம் தேதியன்று ஆட்சேபணை செய்யப்பட்டது. மேற்படி மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்களான மனுதாரர்களும், பிரதிவாதிகளும் மனுதாரர்களது வகையறாக்களும் அருள்மிகு சக்கதேவி கோவிலில் சக்கதேவி சிலை மற்றும் தொன்றுதொட்டு பன்னெடும் காலமாக நிர்வகித்தும், பராமரித்தும் வழிபட்டு வருகிறார்கள். மேற்சொன்ன அருள்மிகு சக்கதேவி கோவிலினை கோசுகுண்டு கிராம குஞ்சில்சாமி பட்டத்து நாயக்கர் வகையறாக்கள் மற்றும் வி.சுந்தரலிங்காபுரம் கிராமத்தைச் சேர்ந்த சின்னனின் வழித்தோன்றல்களான, மனுதாரர்களுக்கும் பிரதிவாதிகளுக்கும் வழிபடும் உரிமை மற்றும் அருள்மிகு சக்கதேவி கோவிலினை பராமரிப்பதற்கும் உரிமை உள்ளது. மேலும், மேற்சொன்ன கோவிலில் வழிபடுபவர்கள் அருள்மிகு சக்கதேவி கோவில் வழிபடுவோர் சங்கம் இ.முத்துலிங்காபுரம் என்பதனை நிறுவி அந்த சங்கமானது 117/2021 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. மேற்சொன்ன சங்கத்தின் 25 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மேற்சொன்ன

சங்கத்தின் உறுப்பினர்கள் அனைவரும் தாவா வழக்கில் அவசியமான கட்சிக்காரர்கள் ஆவார்கள். மேற்சொன்ன சங்கத்தின் தலைவர் ச.பெருமாள் காலமானதைத் தொடர்ந்து ம.சங்கரவேலு என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், மேற்சொன்ன சங்கத்தில் உறுப்பினர்களாக 3, 4 மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்கள் இருந்து வருகின்றார்கள். எனவே, தாவா வழக்கில் மனுதாரர்கள் அவசியமான கட்சிக்காரர்கள் ஆவார்கள். எனவே, தாவா வழக்கில் மனுதாரர்களை தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என்று மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) **<u>1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்:–</u>**

மனுவானது சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். மனுதாரர்கள் மனு வாக்குமூலத்தில் அருள்மிகு சக்கதேவி கோவிலில் சக்கதேவி சிலை மற்றும் சின்னன் பூடத்தின் மேல் அமைந்துள்ள லிங்கத்தினையும், பாரம்பரியமாக தொன்றுதொட்டு பன்னெடும் காலமாக நிர்வகித்தும், பராமரித்தும் வழிபட்டு வருவதாகவும், சக்கதேவி கோவிலினை கோசுகுண்டு கிராம குஞ்சில் சாமி பட்டத்து நாயக்கர் வகையறாக்கள் மற்றும் வி.சுந்தரலிங்கபுரம் கிராமத்தைச் சேர்ந்த சின்னனின் வழித்தோன்றல்களான மனுதாரர்களுக்கும், பிரதிவாதிகளுக்கும் வழிபடும் உரிமை மற்றும் பராமரிப்பதற்கும் உரிமை உள்ளது எனவும் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் பொய்யாகும். மனு வாக்குமூலத்தில் சக்கதேவி கோவில் வழிபடுவோர் சங்கம் பதிவு செய்யப்பட்டு, அதில் 25 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர் எனவும், அதில் 3, 4 மனுதாரர்கள் மட்டும் உறுப்பினர்களாக உள்ளனர் எனவும், 4 மனுதாரர்கள் வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் எனவும் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகிறது. 3, 4 மனுதாரர்கள் மட்டுமே மேற்படி சங்கத்தின் உறுப்பினர்கள் எனில் அதன் தலைவரான சங்கரவேல் என்பவர் ஏற்கனவே வழக்கில் 4ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார் என்பதால் அவரே மேற்படி சங்கத்தின் சார்பாக வழக்கை எடுத்துரைக்கலாம். அப்படியெனில் 3, 4 மனுதாரர்கள் வழக்கிற்கு அவசியமற்றவர்களாவர். மேலும், 1, 2 மனுதாரர்கள் வழக்கு பிரச்சனைக்கு எவ்வாறு தொடர்புடையவர்கள்? ஆவர்கள் யார்? என எவ்வித விபரமும் நிரூபணமின்றி இந்த வழக்கிற்கு எவ்வாறு தொடர்புடைய அவசியத் தரப்பினர்கள் என்பதையும்

மனுதாரர்கள் குறிப்பிடவில்லை.

மேலும், மனுதாரர்கள் ஒருபோதும் சக்கதேவி கோயிலில் வழிபட்டதோ, சக்கதேவி கோயிலை பராமரித்தோ இல்லை. அதோடு சக்கதேவி கோயிலில் அதற்கு முன்னதாக ஒரு காலமும் சின்னன் சிலை இருந்ததில்லை. சின்னன் என்பதற்கும் சக்கதேவி தெய்வத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அது சக்கதேவி கோயிலாகும். சக்கதேவி என்பது பெண் தெய்வமாகும். சக்கதேவி மட்டுமே அந்த கோயிலின் தெய்வமாகும். ஒரே கோயிலில் இரண்டு பிரதான தெய்வங்கள் என்பது சாத்தியமற்றது. கோயில் நிலங்களை அபகரிக்க கையாடல் செய்ய சமீப காலமாக ஒரு கூட்டம் முயன்று வருகிறது. அதன்பொருட்டு வழக்கை திசை திருப்பி குழப்பவும் காலதாமதப்படுத்தவும் மனுதாரர்கள் மனு தாக்கல் செய்துள்ளதால், மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல செய்து வாதிடப்பட்டது.

4) **<u>2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு, 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்</u>**:–

கோவிலினை வழிபடுபவர்களாகிய பிரதிவாதிகள் மற்றும் மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்கள் வகையறாக்கள் அருள்மிகு சக்கதேவி கோவில் வழிபடுவோர் சங்கம் இ.முத்துலிங்காபுரம் என்பதனை நிறுவி அந்த சங்கத்தினை 117/2021 என்ற எண்ணாக பதிவு செய்திருக்கிறார். மேற்சொன்ன சங்கத்தின் தலைவர் ச.பெருமாள் காலமானதைத் தொடர்ந்து ம.சங்கரவேலு என்பவர் தலைவராக நியமித்து செயல்பட்டு வருகிறார். மேலும், மேற்சொன்ன கோவிலினையும், கோவிலில் உள்ள சக்கதேவி மற்றும் சின்னன் சிலைகளை காலம் தொட்டு வழிபட்டு அனுபவித்து வருகிறார்கள். இதற்கிடையில் 1ம் எதிர்மனுதாரர்/வாதி, மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்களையும் மேற்சொன்ன சங்கத்தினை சார்ந்தவர்களையும், அருள்மிகு சக்கதேவி கோவிலினை வழிபடுவதற்கு இடைஞ்சல் செய்ய முயற்சித்தும், அருள்மிகு சக்கதேவி கோவிலினை ஆக்கிரமிக்க முயற்சி செய்து அவருக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்ட கோவிலாக மாற்ற முயற்சி செய்து வருகின்றார். மேற்சொன்ன அருள்மிகு சக்கதேவி கோவிலினை வழிபடுவதற்கும், விழாக்காலங்களில் பராமரிப்பு செய்வதற்கும், உரிமை மற்றும் அனுபவம் இருக்கின்றது.

எனவே, தாவா வழக்கில் மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்கள் கட்சிக்காரர்களாக சேர்த்து வழக்கினை மேல்நடத்த பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

5) **<u>6ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரை சுருக்கம்</u>**:–

மேற்படி சங்கம் பதிவு செய்யப்பட்டு இருந்தால் அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்திருப்பார். மேற்படி அதுபோல எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பதிவு ஆவணத்தில் மொத்தம் 25 நபர்கள் உள்ளார்கள் என்றால் அவர்கள் அனைவரும் கட்சியாக சேர்த்து மனு தாக்கல் செய்திருக்க வேண்டும். தாவா மனுவானது சிலர் மட்டுமே தாக்கல் செய்துள்ளனர். அதனால் மற்ற நபர்கள் குறித்து எந்த விளக்கமும் தெரிவிக்கவில்லை. மற்ற உறுப்பினர்களையும் சேர்த்து மனு தாக்கல் செய்தால் வழக்கில் உரிய காலத்திற்குள்ளாக பரிகாரம் தெரிவிக்க இயலும். அதனால் தாவா மனுவானது உரிய மனுதாரர்களை கட்சியாக சேர்க்கவில்லை என்ற தோசத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, தாவா மனுவானது எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

6) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

7) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

8) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

9) **<u>தீர்வு</u>**:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த

சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மனுதாரரால் தாவா அசல் வழக்கில் மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்களான மனுதாரர்களை 6 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 17.08.2023 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். ஒரு வழக்கைப் பொறுத்து ஆட்சேபணைதாரர் யாருக்கேனும், ஆட்சேபணை இருந்து, அவர்களுக்கு அந்த வழக்கில் சம்பந்தம் ஏதேனும் இருப்பின் அவரையும் அந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து அவர்கள் தரப்பையும் கேட்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். இம்மனுவினையும் மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்கள் தங்களையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோரி தாக்கல் செய்துள்ளார்கள். மனுதாரர்களால் மனுவில் சொல்லியுள்ள விபரங்களைப் பொறுத்து வழக்கு விசாரணையின்போது மட்டுமே தீர்மானிக்க முடியும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, தாவா அசல் வழக்கில் மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்களான மனுதாரர்களை 6 முதல் 9 பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி 17.08.2023 ம் தேதி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2023ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்கள்/ஆட்சேபணைதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை
எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.